Om

# Dwadasopanishad

*With copious extracts from Sri Sankara's Commentaries.*

*Tamil Translation*

# I. Aiterayopanishad.

PUBLISHED

BY

**N. S. RAJARAMIYER**

Saigon SINNAYA Press — Pondicherry.

*All Rights Reserved.*

**1911**

ஓம்.

---

தமிழில்

ஸ்ரீ சங்கரபாஷ்யத்தின் ஸாராம்சங்களடங்கிய

# த்வாதசோபநிஷத்.

---

# I ஐதரேயோபநிஷத்.

---

N. S. ராஜாராமய்யரால்

பிரசுரஞ் செய்யப்பட்டது.

விலை ரூ. 0 – 6 – 0

ஓம்.

ஓம் தத்ஸத்.

# முகவுரை.

சுக துக்கங்களின் பற்றிலிருந்து விடுபடுதல் முக்தி. இஃது உண்மை யறிவினால் கைகூடும். 'உண்மை யறிவு' என்பதும் 'பிரம வித்தை' என்பதும் ஒரே பொருள்படும். பிரமம் உண்மை, வித்தை யென்பது அறிவு. இந்த அறிவுக் கிடமாகிய நூல்கள் அனைத்திலும் உபநிஷத்துக்கள் சிறந்தவை. இதுபற்றியே இவை வேதங்களின் 'ஞானகாண்டம்' எனப்படும்.

இவ்வுபநிஷத்துக்கள் நூற்றெட் டிருந்தாலும், இவற்றுள் பன்னிரண்டைத் தலைமையாகக் கொண்டிருக்கின்றனர். மேற் கூறப்பட்ட பிரம வித்தையை அடைய இப் பன்னிரண்டைப் போன்ற சாதனம், இஹலோகத்திலே வேறில்லை. ஸ்ரீ சங்கராசாரியர் இப் பன்னிரண்டுக்குத்தான் பாஷ்யம் செய்தருளி யிருக்கின்றார்.

ஸம்ஸ்க்ருத பாஷையின் பயிற்சி இக்காலத்தில் மிகவும் மலினமாய்விட்டது. இதனால் நம்மவர்களுக்கு இந் நூலினிடத்தே அளவிறந்த பக்தி விசுவாஸ மிருந்தபோதிலும், இதன் ஆராய்ச்சி மிகவுங் குறைந்துபோ யிருக்கின்றது. பிரம வித்தைக்கு ஊன்றுகோலாகிய இந் நூல் நம்மவர்களுக்குப் பயன்படவேண்டுமென்ற கருத்துகொண்டே எனது காலஞ் சென்ற பிதா, நாகப்பட்டணத்து வக்கீல் நா. ப. சுப்பிரமணிய அய்யர் இதனைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

திரிசிரபுரம் பிரம ஸ்ரீ மஹாதேவ சாஸ்திரியாரென்ற ஒரு மஹானை குருவாக அடைந்து, மதுது பிதா கிறிஸ்த வாப்தம் 1881 முதல் 1884 முடிவு பரியந்தம் வேதாந்த சிரவணம் செய்த காலத்தில் இந்த மொழிபெயர்ப் பெழுதப்பட்டது.

எனது பிதாவின் அரிய நண்பர்களில் ஒருவராகையால் அக்காலத்திலேயே அம்மொழிபெயர்ப்பின் செய்தியை நன்றாக அறிந்தவராகிய ‘பிரம வித்தியா’ பத்திராதிபர், பிரம ஸ்ரீ ஸ்ரீநிவாச சாஸ்திரி யவர்கள், எனது தந்தையின் மரணத்திற்கப்பால், என்னிடம் இம்மொழிபெயர்ப்பைக் கேட்டு வாங்கித் தாம் அச்சிடுவதற்குரிய ஏற்பாடு செய்துகொண்டிருந்தார். நூற்றெட்டுபநிஷத்துக்களையுந் தமிழிலே பிரசுரிக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்ட ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் முக்கிய உபநிஷத்துக்கள் பன்னிரண்டுக்கும் இம்மொழி பெயர்ப்பையே உபயோகப்படுத்திக்கொண்டு, இனி எனது தந்தையால் எழுதப்படாத மற்ற உபநிஷத்துக்களுக்குத் தாம் மொழிபெயர்ப் பெழுதத் தொடங்கினர்.

சிறிதுகாலத்திற் கெல்லாம் அம்மஹான் இறந்துபோய்விட்டார். அப்படிப்பட்ட பண்டித ரிருந்து இதனை வெளியிடும் பாக்கியம் எனக்கும், தமிழ் நாட்டிற்கும் பிராப்தியாகாமல் போய்விட்டது. பிறகு, ஸமீபகாலத்தில் இம்மொழிபெயர்ப்பைப் பல கீர்த்திபெற்ற வித்வான்களும், அத்வைதிகளும் பார்வையிட நேரிட்டது. அவர்க ளெல்லோரும் இம்மொழிபெயர்ப்பு மூதனூலின் கருத்துக்கு முற்றிலும் ஒத்ததாகவும், பிழையற்றதாகவும், சுத்தமாகவும், தெளிவாகவும் இருப்பதாகக் கூறி வியந்து பேசியதுடன், இந்து முக்தி தேடுவோருக்குப் பரமோபகாரமாதலால், இதனை அச்சிட்டு வெளிப்படுத்தும்படி என்னை வற்புறுத்தினர்.

இவற்றை ‘ஈச, கேன, கட’ என்ற சாதாரண வழக்கின்படி வெளியிடாமல், ருக், யஜுர், ஸாம, அதர்வண என்ற நான்கு வேதங்களின் கிரமப்படி அவ்வவ் வேதங்களைச் சேர்ந்த உபநிஷத்துக்களைச் சேர்த்து வெளிப்படுத்துகிறேன்.

மொழிபெயர்ப்புக் கிடையே ஸ்ரீ சங்கர பாஷ்யத்தின் சாரங்களை ( ) இவ்விதமான இரட்டை வளைவுக்கு நடுவிலும், அவர்து தாத்பர்யாதிகளைச் சிறு எழுத்திலும் அச்சிட்டிருக்கிறது.

லோகோபகார நிஷ்டர்களாகிய பல மடாதிபதிகளும், பிரபுத் தன்மையின் கடமைகளை உண்மையாக அறிந்த நாட்டுக்கோட்டையார்களிலே சில பிரபுக்களும், இப்பிரசுரத்தின் செலவுக்கு உதவி செய்கிறார்களாகையால், விலைகொடுத்து வாங்க இயலாத எளிய முமுக்ஷுக்களுக்கெல்லாம் இதனை இனாமாக அனுப்பக் காத்திருக்கிறேன்.

சிதம்பரம்<br>
சாதாரண ௵<br>
தை மீ 1-ம் உ

**N. S. ராஜாராமய்யர்.**

---

# (I) ருக்வேதம்.

## 1. ஐதரேயோபநிஷத்.

ஓம்.

ஓம் தத்ஸத்.

## ருக்வேதீய

# ஐதரேயோபநிஷத்

---

### சாந்தி.

**(இனிச் சொல்லப்படப்போகிற பிரம வித்யா பிராப்திக்கு இடையூறு நேராவண்ணம் சாந்தி சொல்லப்படுகிறது.)**

என்னுடைய (இவ்வுபநிடதத்தைப் படிக்கும் விஷயத்தில் பிரவிர்த்தித்த) வாக் எக்காலத்திலும் மனதில் ஸ்திரமாக விருக்கட்டும்; என் மனதும் வாக்கில் ஸ்திதியை அடைகின்றது. (வாக் மனங்கள் ஒன்றற்கொன்று உதவிபுரிய வேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது.) ஹே! ஜோதி ரூபமான பரமாத்மாவே! எனது அக்ஞானத்தைப் போக்கடித்துப் பிரகாசத்தை அடையும்படி செய்க. ஹே, மனோவாக்குக்களே! எனக்குக் கீழ்ச்சொல்லிய பிரம ஞானத்தை வெளியிடுங் கிரந்தத்தைத் தருவதற்கு ஸமர்த்தராகுங்கள். என்னால் கேட்கப்பட்ட கிரந்தம், அதனர்த்தம், இவைகளை நான் மறவாமலிருக்கட்டும்; அத்தியயனஞ் செய்யப்பட்டு மறவாமலுமிருக்கிற கிரந்தத்தை நான் இரவும் பகலும் அனுஸந்தானஞ் செய்வேனாகுக. (படிக்கப்பட்ட கிரந்தத்தில்) யதார்த்தமான வஸ்துவை (பிரமத்தை) சொல்லப் போகின்றேன். நீரே ஸத்தியம். (மனதால் வாஸ்தவ பதார்த்தத்தை விசாரித்து வாக்கால் உண்மையைச் சொல்லுவேன்.) மேற்கூறிய பிரமமானது என்னையும் எனக்கு உபதேசிக்கின்ற குருவையும் ரக்ஷிக்கட்டும்.

(**ஸ்ரீ சங்கர பாஷ்யப் பிரதீக சங்கிரஹம். —** இந்த ஐதரேயோபநிஷத் ருக்வேதத்தின் ஐதரேய பிராஹ்மணத்தினுடைய இரண்டாவது

ஆரண்யகத்திலுள்ளது. இதன் முன்னே வெறுங் கர்மம் மட்டுஞ் சொல்லப்பட்டு முடிந்தது.

"ஞானத்துடன் கூடிய கர்மத்துக்குப் பரமான கதி யாதெனில், அதுவும் பிரணவத்தை யறிவதுடன் முடிந்தது. பிராணனென்ற ஒரே தேவன் இருக்கின்றான்; அத்தேவனுக்கு வாக் முதலிய இந்திரியங்களாகின்ற தேவர்கள் விபூதிகளாம், விஸ்தாரங்களாம். ஒரு புருஷன் இந்தப் பிராணாத்மாவாக ஆகின்றான்; இவ்விதம் தேவதை யாகின்றதே புருஷார்த்தம். இதுதான் மோக்ஷம் ஞானத்துடன் கூடிய கர்மத்தால் இதைவிட அதிகமாக ஒன்றுங் கிடைக்காது" என்று சிலர் கூறுங் கக்ஷியை மறுத்துக் கேவலமான ஆத்ம ஞானமே மோக்ஷ ஸாதனமென்று சாதிக்கும் பொருட்டு இந்த உபநிஷத் ஆரம்பிக்கப்படுகிறது. கர்ம சாதனமின்றி கேவல ஞான மட்டில் போதுமாவென்ற கக்ஷியை விஸ்தாரமாக எடுத்துப் பேசி, முடிவில் கேவல ஞானமே போதியதென்று சித்தாந்தப்படுத்துவதற்காகவே இந்த உபநிஷத் சொல்லப்பட்டதென்று பிரதீகத்தில் கூறப்படுகிறது.)

ஓம்.

ஓம் தத்ஸத்.

# ஐதரேயோபநிஷத்.

## முதல் அத்தியாயம்.

### கண்டம் I.

1. (நாம ரூபங்களாக விகாரப்பட்டுக் காணப்படுகின்ற) இந்த ஜகத்தானது, சிருஷ்டிக்கு முன் ஒரே ஆத்மாவாக இருந்தது. அவரையன்றி வேறொன்றுமில்லை; அந்த ஆத்மா லோகங்களைச் சிருஷ்டிப்போமென்று ஆலோசித்தனர்.

2. அங்ஙனம் ஆலோசித்து இவ்வுலகங்களைச் சிருஷ்டித்தனர்; அவைகளாவன, அம்பஸ்: சுவர்க்கலோகமும், அதன்மேலுள்ள மஹா, ஜந, தப, ஸத்ய முதலிய இந்த உலகங்களும்; மரீசி: சூரிய கிரணங்களால் வியாபிக்கப்பட்ட அந்தரிக்ஷ லோகம்; மரம்: ஜீவன்கள் நாசமுறும் பூமி, பூலோகம்; ஆபஸ்: ஜல சம்பந்தமான பூமிக்குக் கீழ்ப்பட்ட உலகங்கள். இந்த உலகங்களை, ஜலத்தைப் பிரதானமாகவுடைய பஞ்சபூதங்களைக்கொண்டு சிருஷ்டித்தனர்.

3. இப்பொழுது என்றால் சிருஷ்டிக்கப்பட்ட உலகங்கள் பரிபாலிக்கப்படாவிடின் நாசமுறும். ஆதலால், லோக பாலர்களைச் சிருஷ்டிப்போமென்று மீண்டும் ஆலோசித்தார். அங்ஙனம் யோசித்து, மேற்கூறிப் போந்த பஞ்சபூதங்களினின்றும் ஓர் புருஷாகாரமாகத் திரட்டி அதைப் பிண்டமாக்கினார்.

4. அப்பிண்டத்தைக் குறித்து சங்கற்பஞ் செய்தார். அதினின்றும் முகமுண்டாயிற்று, பக்ஷியின் முட்டைபோல், அம்முகத்தினின்றும் வாக் இந்திரியம் உண்டாயிற்று. அதினின்

றும் அக்கினி தேவதை உற்பவித்தது. பிறகு நாசிகள் - அவைகளிலிருந்து க்ராணேந்திரியம் உண்டாயிற்று; அதினின்றும் எங்குமுள்ள வாயு தேவதை உண்டாயிற்று. பிறகு கண்கள் - அவைகளினின்றும் சக்ஷுரிந்திரியம்; அதினின்றும் ஆதித்திய தேவதை. பிறகு காதுகள் - அவைகளினின்றும் சுரோத்திரேந்திரியம்; அதினின்றுந் திக் தேவதை. பிறகு தோல் - அதினின்றும் லோமங்களாகிற ஸ்பர்சனேந்திரியம்;* அதினின்றும் ஒஷதி முதலியவற்றிற்கு அதிஷ்டான தேவதையாகின்ற வாயு தேவதை. பிறகு அந்தக் காணத்திற்கு அதிஷ்டானமா யிருக்கின்ற ஹிருதய கமலம் - அதினின்றும் மன இந்திரியம்; அதினின்றும் சந்திர தேவதை. பிறகு நாபி (கொப்பூழ்) - அதினின்றும் பாயு விந்திரியம்; அதினின்றும் மிருத்தியு தேவதை. பிறகு சிச்னம் - அதினின்றும் ரேதஸாகின்ற உபஸ்தேந்திரியம்; அதினின்றும் அப் தேவதை (வருணன்). இங்ஙனமாக லோக பாலர்களைச் சிருஷ்டித்தனர்.

---

### கண்டம் II.

1. இந்த (அக்கினி முதலிய இந்திரிய) தேவதைகள் மகத்தான இந்த ஸம்சார சாகரத்தில் விழுந்தார்கள்; (சமுத்திர லக்ஷணம் - அவித்தியா காம கர்ம மிவைகளா லுண்டான துக்கமாகின்ற ஜலமுள்ளது; ரோகம், ஜரை, மரணம் முதலிய பெரிய முதலைகளால் சூழப்பட்டது; அநாதி; முடிவற்றது; கரையற்றது; பிடிப்பில்லாதது; விஷயேந்திரியங்களா லுண்டாகுஞ் சுக லேசத்தால் க்ஷணகாலம் ஆறுதலுள்ளது; ஐந்து இந்திரியங்கள், அர்த்தம், ஆசை இவையாகிற காற்றினு லசைக்கப்பட்டு எழுகின்ற அநேக அநர்த்தங்களாகின்ற அலைகளையுடையது; வியசனத்தாலுண்டான ரோதனங்களாகிற பெருங் கூச்சலை யுடைத்தானது; சத்தியம், நேர்மை, தானம், தயை, அஹிம்சை, தம, சம, திருதி முதலான ஆத்ம குணங்களாகின்ற கட்டுச்சோறு நிறைந்த ஞானமாகின்ற ஓடத்தைக் கொண்டே கடக்கத்தக்கது.

அக்கரை சேர்வதற்கு ஸத்ஸங்கம், சர்வத்தியாகம் இவையாகும் மார்க்கமுள்ளது; மோக்ஷமாகின்ற அக்கரையுள்ளது.)

அந்த ஆத்மாவானவர் மேற்கூறிய பிரகாரம் முதலில் சிருஷ்டிக்கப்பட்ட புருஷ பிண்டத்தைப் பசி, தாகம் இவைகளுடன் சேர்த்துவைத்தனர். இதனால் மேற்படி பிண்டத்தினின்றும் வெளிப்பட்ட தேவதைகளுக்கும் பசி, தாகம் உண்டாயிற்று. அப்பொழுது நாங்கள் எவ்விடமிருந்து அன்னஞ் சாப்பிடுவோமோ அவ்விடத்தை எங்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று அத்தேவதைகள் பிரம்மத்தை நோக்கி வினவினார்கள்.

2. அதற்கு ஈசுவரன் பசுவின் உருவைப்போல் ஒரு பிண்டத்தைச் சிருஷ்டித்து இதில் இருங்களென்று காண்பித்தனர். தேவதைகள் இது எங்களுக்குப் போதியதல்லவென்று சொன்னார்கள். பிறகு ஒரு குதிரையைச் சிருஷ்டித்து அதனைக் காண்பித்தனர். அதுவும் போதாதென்றார்கள்.

3. அதன் பிறகு ஒரு புருஷனைக் காண்பித்தார். இது போதுமென்று ஒப்பினார்கள். அப்படியானால், அதனுள் பிரவேசியுங்களென்று சொன்னார்.

82 899

4. அக்கினி—வாக் ரூபமாய் முகத்திலும், வாயு—க்ராணமாக மூக்கிலும், ஆதித்தியன்—சக்ஷுரிந்திரியமாகக் கண்களிலும், திக்குகள்—சுரோத்ரேந்திரியமாகக் காதுகளிலும், ஓஷதி வனஸ்பதிகள் — ஸ்பர்சனேந்திரியமாகத் தோலிலும், சந்திரன் — மனஸாக இருதயத்திலும், மிருத்யு — பாயு விந்திரியமாக நாபியிலும், ஜலம்—உபஸ்தேந்திரியமாக உபஸ்தத்திலும் பிரவேசித்தார்கள்.

5. பசி, தாகம் இவ்விரண்டும் எங்களுக்கு இருப்பிடம் ஏற்படுத்த வேண்டுமென்று ஈசுவரனைக் கேட்டன; அதற்கவர் இந்தத் தேவதைகளினிடம் இருங்களென்றார்; அவர்கட்குக் கிடைக்கும் ஆகாரத்தில் உங்களுக்கும் பாகமுண்டென்றார்; ஆதலால் எந்தத் தேவதைக்கு ஹவிஸ் கொடுக்கப்படினும் அதில் பசி, தாகம் இவைகளுக்கும் பாகமுண்டு. (அதாவது பசி, தாகமிருப்பதால் இந்திரிய தேவதைகளும் அன்னத்தைக் கிரகிக்கின்றார்கள்.)

(ஜீவனுக்கே போக் திருத்துவம்; இந்திரிய தேவதைகள், பசி, தாகம் இவர்கட்குப் போக் திருத்துவ மில்லையென்று சொல்லப்பட் டிருந்தபோதிலும், அது தோஷமாகாது; உண்மையாக வே ப்ரம்ம ஸ்வரூபமாகிற ஜீவனுக்குப் போக் திருத்துவ மில்லா விடினும், இந்திரிய தேவதைகள், பசி, தாகம் இவர்களாகின்ற உபாதியினால் ஜீவனுக்குப் போக் திருத்துவஞ் சொல்லப்பட் டது.)

---

## கண்டம் III.

1. இவ்விதம் நம்மால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்ற உலகங் களுக்கும் லோக பாலர்களுக்கும், பசி, தாகத்தை யுறபடுத்தி யிருப்பதால் அவர்கட்கு அன்னத்தைச் சிருஷ்டிப்போமென்று ஈசுவரன் ஆலோசித்தார்.

2. ஜலத்தை நோக்கிச் சங்கல்பஞ் செய்தார். அதினின் றும் ஓர் உருவமாக உண்டாயிற்று; அதுவே கனரூபமாயுங் கரங் களால் எடுக்கத்தக்கதாயும், சராசர லக்ஷண மமையப்பட்டதாயு முள்ள அன்னம். (ஆகாரத்துக்குத்தக்க ஜந்துக்கள் சரம்; நெல் முதலியன அசரம்).

3. இங்ஙனஞ் சிருஷ்டிக்கப்பட்ட அன்னம் பின்பட்டு ஓடத் தொடங்கிற்று. (அதாவது தேவதைகளால் உண்ணப்படாமலிருந் தது;) அப்பொழுது ஆதியில் சிருஷ்டிக்கப்பட்ட மேற்கண்ட புருஷன் வாய்ப் பேச்சால் அன்னத்தைக் கிரகிக்க உத்தேசித் தான்; முடியவில்லை. அது முடியுமாயின் ஒருவன் அன்னத் தைப் பற்றிப் பேசுவதினாலேயே திருப்தியடையக்கூடும். (அது அசம்பாவிதமென்பது கருத்து).

4. பிறகு கிராணேந்திரியத்தால் அன்னத்தைக் கிரகிக்க இச்சித்தான்; அதுவும் பயன்படவில்லை; அவ்விதமானால் முகர் தலினாலேயே திருப்தியடையக்கூடும். (அதுவும் அசம்பா விதம்.)

5. பிறகு சக்ஷுரிந்திரியத்தால் அன்னத்தைக் கிரகிக்க விருப்பமுற்றான்; அதுவும் பயன்படவில்லை; அவ்விதமானால் பார்ப்பதினாலேயே திருப்தியை அடையமுடியும். (இதுவும் அசம்பாவிதம்).

6. சுரோத்திரேந்திரியத்தால் (கேட்பதினால்);

7. ஸ்பர்சனேந்திரியத்தால் (தொடுவதினால்);

8. மனத்தால் (நினைப்பதனால்);

9. சிச்னத்தால் (விஸர்ஜனத்தினால்) அன்னத்தைக் கிரகிக்க இச்சித்தான். மேற்சொல்லப்பட்டவைகளினாலும் முடியவில்லை.

10. பிறகு அபானவாயுவால் அன்னத்தைக் கிரகிக்க இச்சித்தபொழுது கிரகிக்க முடிந்தது. இந்த வாயுவே அன்னத்தைக் கிரகிக்கத் தகுந்தது. இந்த வாயு அன்னத்தைக்கொண்டு ஜீவித்திருக்கின்றதென்பது பிரசித்தம்.

11. வாக்கால் பேசப்படினும், கிராணத்தால் முகரப்படினும், கண்களால் பார்க்கப்படினும், சுரோத்திரத்தால் கேட்கப்படினும், துவக்கால் தொடப்படினும், மனதால் தியானிக்கப்படினும், அபானத்தால் க்ரகிக்கப்படினும், சிச்னத்தால் விசர்ஜனஞ் செய்யப்படினும், இந்தக் காரியகாரணக் கூட்டமானது என்னையன்றி எவ்விதம் நிலைபெற்றிருக்கக்கூடும்? நான் எவ்வித சுவரூபனாக விருக்கின்றேன்? (அதாவது இவைகளை நான் ஏவாவிடில் இவைகள் தம்தம் தொழில்களை எவ்வாறு நடத்தும்? ஒருபொழுதும் நடத்த முடியாது. ஆனதுபற்றி இவைகளுள் நாம் பிரவேசிக்கவேண்டும். தலை கால் இவ்விரண்டு மார்க்கங்களுள் எவ்வழியாய்ப் பிரவேசிப்போம் என்று ஈசுவரன் ஆலோசித்தார்.)

12. இந்த உச்சியைப் பிளந்து அவர் அதன் வாயிலாகப் பிரவேசித்தார். இதற்கு விதிருதி (பிளப்பு, துவாரம்) என்று பெயர்; இது ஆநந்த மயமான துவாரம்; இவ்வழியாக உட்புகுந்த இவருக்கு மூன்று இருப்பிடங்களுண்டு; ஜாக்கிரதாவஸ்தையில்

வலது கண்; சுவப்னவஸ்தையில் மனது; சுழுப்தி அவஸ்தையில் ஹிருதயாகாசம்; இம்மூன்றும் ஸ்வப்னங்கள். (அதாவது ஜாகிருத சுவப்ன சுழுப்தி ஆகிய இம்மூன்றும் நசுவரங்களானதால் சுவப்னம்போல் இருக்கின்றபடியால் சுவப்னங்களென்றே கூறப்பட்டன).

13. இவ்விதமுண்டான (இவ்விதங் காரியகாரண கூட்டமாகின்ற உபாதியுடன் சேர்ந்த) ஜீவன் அகங்காரமடைந்து, "இச் சரீரத்தில் வேறு யாதிருக்கிறது, எல்லாம் நாம்" என்று அபிமானங்கொண்டு ஆரோபித்துக் கொள்ளுகின்றான். இவ்விதம் நீடூழிகாலம் அறியாமையால் உறக்கமுற்று, பிறகு ஓர் சமயம் பரம கிருபாநிதியாகிய ஆசாரியருடைய உபதேசத்தால் விழித்துக்கொண்டு, மேற்குறித்த இந்தப் புருஷனை (பிரமத்தைத்) தன்னிடத்திற் றானுகவே பார்க்கின்றான்.

14. ஆதலால் இந்தப் புருஷனுக்கு இதந்திரனென்று பெயர். (இதந்திரன் இதனைப் பார்க்கிறவன்; இந்த அபரோக்ஷமாயிருக்கின்ற பிரத்தியகாத்மா சரீரத்தில் இருப்பதாகக் காணப்படுகிற ஆத்மாவையே பார்க்கின்றார்; அதாவது பிரத்தியகாத்மாவாகவே யிருக்கின்றார்). அவரை இந்திரனென்று பரோக்ஷமாகச் சொல்லுகின்றார்கள். (பூஜ்யர்களின் பெயரை நேரில் கூறுவதைக்காட்டிலும், பரோக்ஷமாகச் சொல்வது மரியாதையாம்; பூஜ்யர்களுக்கெல்லாம் பூஜ்யராயுள்ள ஈசுவரனை அங்ஙனம் மரியாதை செய்யத் தடை என்ன?)

(இவ்வத்தியாயத்தின் முக்கிய தாத்பரியம். — உலகத்தை ஆக்கி, அளித்து, அழிப்பவன், அஸம்ஸாரி, ஸர்வக்ஞன், சர்வ சக்தன், சர்வ வித்தாகிய பரமாத்மா, இந்த எல்லா ஜகத்தையும் யாதொரு உபாதான காரணமின்றி ஆகாசாதி கிரமமாகத்தானே சிருஷ்டித்து தனது ஆத்மாவைத் தானே அறிந்துகொள்ளும் பொருட்டு, சகல பிராணிகளின் சரீரங்களிலுந் தானே பிரவேசித்து, தனது ஆத்மாவைப் பிரமம் நானாகவே யிருக்கிறேனென்று அறிந்துகொள்ளுகிறார். ஆதலால் எல்லாச் சரீரங்களிலும் ஒரே ஆத்மாவே யன்றி வேறில்லை என்பது இதன் தாத்பரியம்.

சிருஷ்டிக் கிரமத்தில் அனேக விஷயங்களில் அசம்பாவித மிருக்கிறதென்ற ஆக்ஷேபத்துக்குச் சமாதான மிரண்டு சொல்லப்பட்டிருக்கின்றன. (1) சிருஷ்டி கிரமஞ் சொல்லியது அர்த்தவாதம். அதாவது இந்த ஜகத்தின் லக்ஷணத்தை எளிதில் போதிப்பிக்கவேண்டிய நிமித்தம் உலக வியவகாரம்போல் ஒரு கட்டுக்கதையாகக் கூறப்பட்டது. ஆத்மாவை யறியவேண்டியது முக்கியமே தவிர சிருஷ்டிக் கிரமந் தெரிந்துகொள்வதில் யாதொரு பயனுமில்லை. (2) அங்ஙன மில்லாவிடினும், மாயாவியா யிருக்கின்ற ஈசுவரனுக்கு யாதுதான் செய்யவியலாது? மாயைக்கு யாதும் அசம்பாவிதமில்லை; யாவுங் கூடும். ஆத்மாவை அறிவதற்குச் சாஸ்திரோபதேசமே விதியென்க. வேறொன்றுமில்லை. ஆதலால் ஆத்ம ரூபத்தைப் போதிக்க உபநிஷத் முதலிய சாஸ்திரங்கள் பிரவிர்த்தித்திருக்கின்றன. எதுவரை தன் ஆத்மாவை யறியாமலிருக்கின்றானோ அதுவரை அவித்தையாலுண்டான உபாதி தர்மங்களைத் தனக்கென்று கருதி பிரமன் முதல் ஸ்தம்பப் பூச்சி ஈறாகவுள்ள ஜன்மங்களை அடிக்கடி மீண்டு மீண்டு மெடுத்து அவித்தியா காம கர்ம வசத்தால் சம்சரிக்கின்றான். இவ்விதம் ஒவ்வொரு தடவையிலு மடைந்த தேகேந்திரியக் கூட்டத்தை விட்டொழிகிறான். பிறகு வேறு கூட்டத்தை யடைகிறான். இவ்விதம் அடிக்கடி ஜனன மரண துக்கத்துக்குள் இடர்ப்பட்டு உழல்கின்றான். இத்தகைமை வாய்ந்தவன் எப்படிப்பட்ட அவஸ்தைகளுடன் இருக்கிறான் என்பதைப்பற்றிச் சுருதி பின்னே மொழிகின்றது).

---

# இரண்டாம் அத்தியாயம்.

## கண்டம் IV.

இந்த ஜீவன் வைராக்கியத்தால் அவித்தியா காம கர்மவானுக்... ஞாதி கர்மங்களை யியற்றி இவ்வுலகத்தினின்றுந் தூமாதி மார்க்கமாய்ச் சந்திர லோகத்தை யடைந்து, அங்கு கர்ம பலன் குறைவுற்றவுடன் விருஷ்டியாதிக் கிரமமாக இவ்வுலகத்தைப் பெற்று அன்ன ரூபமாகி புருஷாக்கினியில் வீழ்த்தப்படுகின்றான். அப்புருஷனிடம் முதல் முதல் ரேதஸ் ரூபமாகக் கர்ப்பமாக விருக்கின்றான். இவ்விஷயம் விவரமா இந்த அத்தியாயத்தில் எடுத்துரைக்கப்படும்.

1. இந்த ஜீவன் முதலில் புருஷனிடங் கர்ப்பமாயிருக்கின் றான். யாங்ஙனமெனின், அன்னமயமான தேகத்தின் எல்ல அங்கங்களினின்றும் ஸாரமாக உண்டாகின்ற ரேதஸ் ரூபமாகி தனதாத்மாவைத் தன்னிடமே பிதா தரிக்கின்றான். அந்த ரேத ஸை ஸ்திரீயினிடம் எப்பொழுது ஸம்யோக காலத்தில் வெளி விடுகிறானோ அப்பொழுது அந்த ஜீவனுக்கு முதல் ஜன்ம முண் டாகின்றது. (அதாவது முதலிலுண்டாகிற அவஸ்தை).

2. அத்தகைய ஸ்திரீயினிடம் விடப்பட்ட ரேதஸானது அவளையே சார்ந்ததாக ஆகிவிடுகின்றது. (அதாவது தன் சொந் அங்கமாகிய ஸ்தனம் முதலானது எவ்விதந் தன் தேகத்துடன் ஒத்ததா யிருக்கின்றதோ அப்படியே யென்க). ஆதலால் அ தக் கர்ப்பம் இவளை ஹிம்சிக்கின்றதில்லை. அவள் இவ்விதப் உண்டான கர்ப்பத்தைப் பாதுகாக்கின்றாள்.

3. அங்ஙனங் கர்ப்பத்தைப் பாதுகாக்கின்ற அவளுங் காப் பாற்றப்படவேண்டியது. அவள் கர்ப்பத்தைத் தரிக்கின்றாள் பத்தாவது மாதத்தில் குமாரன் ஜனிக்கின்றான்; பிதாவுடைய ஆத்மாவே புத்திர ரூபமாக உண்டாகின்றான். அவ்வித முண் டான குமாரனை பிதா ஜாதகர்ம முதலான கிரியைகளால், தன் னைப்போலப் பாவிக்கின்றான். அங்ஙனஞ் செய்வது எதத்

கெனின் உலக சந்ததிகள் விருத்தியாகும் பொருட்டு. (அதாவது புத்திரோத்பத்தியானது சந்ததி விருத்திக்குமட்டுமேயன்றி மோக்ஷத்திற்கல்ல). இவ்விதம் மாதாவின் கர்பபத்திலிருந்து வெளிப்பட்டு வருவது இந்த ஜீவனுடைய இரண்டாவது ஜன்மம், (அதாவது இரண்டாவது அவஸ்தை).

4. இவ்விதமுண்டான புத்திராத்மா, பிதாவிற்குப் புண்ணிய கர்மங்களைச் செய்ய பிரதிநிதியாகிறான். (அதாவது பிதாவுக்குப் பிரதியாக இருந்து புண்ணிய கர்மங்களைச் செய்கின்றான்). அப்பொழுது இந்தப் பிதாவான ஆத்மா கிருத கிருத்தியனாக வயோதிகத்தை யடைந்து மரிக்கின்றான். (அதாவது இத்தேகத்தை விடுகின்றான்.) அங்ஙனம் விட்டவன் கர்ம வசத்தால் வேறு ஜன்மத்தை யடைகின்றான். இந்த ஜீவனுடைய மூன்றாவது ஜன்மம் (அதாவது மூன்றாவது அவஸ்தை).

5. “கர்ப்பத்திலிருந்துகொண்டே இந்த வாக் அக்னியாதி தேவர்களின் எல்லா ஜன்மங்களையு மறிந்துகொண்டேன்; முன்னர் [illegible] இரும்பைப்போலக் [illegible] இருக்கின்ற அனேக சரீரங்கள் என்னை (அதாவது [illegible]) ரக்ஷித்தன; இப்பொழுது பருந்து வலையினின்றும் அறுத்துக் கொண்டு தப்பி ஓடுவதுபோலத் தத்வ ஞானத்தாலுண்டான சாமர்த்தியத்தினால் இந்தச் சம்சாரத்தைப் பிளந்துகொண்டு வெளிக் கிளம்புகின்றேன்” என்று கர்ப்பத்திலிருந்துகொண்டே வாமதேவர் சொன்னார்.

6. இப்படிப்பட்ட ஞானியான வாமதேவர், இச்சரீரத்தை விட்டுக் கிளம்பி, ஸ்வர்க்கத்தில் எல்லாக் காமங்களையும் பெற்று அமிருதரானார்.

# மூன்றும் அத்தியாயம்.

## கண்டம் V.

1. (முமுக்ஷுக்களாயிருந்த பிராமணர்கள் ஒருவர்க்கொருவர் பிரச்னம் பண்ணிக்கொள்ளுகின்றதாவது):

எவனை இவ் ஆத்மாவென்று சாக்ஷாத்காரமாய் பார்க்கவேண்டியதோ அவன் யார்? இவ்விரண்டில் எவன் ஆத்மா? (பிரதமத்தில் சொல்லப்பட்டவனா? அல்லது சொல்லப்பட்டவனா?) எதனால் ரூபத்தைப் பார்க்கின்றேனோ, எதனால் சப்தங்களைக் கேட்கின்றேனோ, எதனால் கந்தங்களை முகர்கின்றேனோ, எதனால் வாக்கைப் பிரயோகிக்கின்றேனோ, எதனால் இனியதை இனியதல்லாததென்று பிரிக்கின்றேனோ அதுவா? யாதெனில்:

2. ஹிருதயமென்றும் மனமென்றும் சொல்லப்படுவது, மனமென்று உபாதானமாய்ச் சொல்லப்படுவது. அந்த இரண்டுமேயாம் (இவ் விரண்டு நாமங்களின் பொருளை ஒன்றென்றுஞ் சொல்லப்படும்; இதைக் காண ஸம்ஞானத்தை யாரும் பாவிக்கவேண்டிய ஆத்மாவல்லவா? அதுவா மற்றியாது? இந்த ஹிருதயமே ரூபமான ஞானத்தைக்கொண்டு அவன் உபலப்தியை அடைகின்றானோ, அவனுடைய ஞானத்திற்கு அடியில் கண்ட ஸம்ஞானாதிகள் அந்த ஞானவிருத்திகளாயிருக்கின்றனவோ, அத்தகைய வஸ்து உபாஸிக்கத்தக்க ஆத்மாவென்று நிச்சயித்துக்கொண்டார்கள்.) அவ்விருத்திகளாவன: — ஸம்ஞானம் (சேதன பாவம், பிராணித்வம்); ஆக்ஞானம் (ஈசுவர பாவம்); விஞ்ஞானம் (லௌகிக ஞானம்); ப்ரஞானம் (அறிவு); மேதா (படித்ததை மறவாத சாமர்த்தியம்); திருஷ்டி (இந்திரிய மூலமாக எல்லாவற்றையு மறிவது); திருதி (தைரியம்); மதி (நினைவு); மனீஷா (நிச்சய புத்தி); ஜூதி (மனதிற்கு வருந துக்காவஸ்தை); ஸ்மிருதி (ஞாபகம்); ஸங்கல்பம் (ஏற்பாடு); க்ருது (தீர்மானம்); அஸு (ஜீவித்துக்கொண் டிருக்கும்படியான விர்த்தி); காமம்

(கிட்டாததில் ஆசைவைத்தல்); வசம் (ஸ்திரீ முதலியவர்களிடத்தில் இச்சை); இவைகளெல்லாம் பிரஞ்ஞானத்தின் பெயர்கள் (அதாவது, சுத்தப் பிரஞ்ஞானமாக விருப்பது பிரமம்; அப்பிரமத்துக்கு மேற்கூறப்பட்ட ஸம்ஞானாதி அந்தக்கரண விர்த்திகள் நாமதேயங்கள், உபாதிகளாக விருக்கின்றன. இவ்வுபாதிகளுடன் சேரின் நாமரூபாத்மகமாக விருக்கும் பிரமமாகின்றது).

3. (இந்தகைய பிரஞ்ஞான ரூபமாக இருப்பதே பிரமம்; இவ்வித பிரமம் எல்லாச் சரீரங்களிலும் புகுந்து, அந்தக்கரணோபாதிகளிற் சேர்ந்து பல ஜலாசயங்களில் ஒரே சூரியன் பல சூரிய பிம்பங்களாகத் தோன்றுவதுபோல, ஒவ்வொரு பிராணியினிடத்தும் பின்னமாகவே காணப்படுகின்றது). இவரே இந்திரன், பிரஜாபதி (முற்கூறப்பட்ட முதன் முதல் உண்டானவர்), இவரே தேவர்கள் (மேலே படைப்புற்ற அக்கினியாதி தேவர்கள்); இவரே பிருதிவி முதலான பஞ்சபூதங்கள்; இவரே க்ஷுத்ர மிசிரங்கள் (ஸர்ப்பாதி ஜந்துக்கள்); இவரே பீஜங்கள் (காரணங்கள்). இன்னும் மற்றுமுள்ளவைகளாவன:— அண்டத்திலுண்டாகின்ற ஜந்துக்கள், கர்ப்பப் பையிலுண்டாகின்ற ஜந்துக்கள், வியர்வையிலுண்டாகிற ஜந்துக்கள், முளைக்கின்ற விருக்ஷங்கள், அசுவங்கள், கோக்கள், புருஷர்கள், யானைகள், இன்னும் மற்றுமுள்ள பிராணிகள் யாவும், பக்ஷிகள், ஸ்தாவரம் (கல் முதலியன) எல்லாம் பிரமம் யாவும் பிரஞ்ஞா நேத்திரம் (அதாவது பிரஞ்ஞையையே நேத்திரமாக, அதாவது நடத்துகிற கர்த்தாவாக வைத்துக்கொண்டிருப்பது). யாவும் பிரஞ்ஞானத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. உலகமே பிரஞ்ஞா நேத்திரம். பிரஞ்ஞையே பிரதிஷ்டை; பிரஞ்ஞானமே பிரமம்.

4. முற்கூறப்பட்ட வாமதேவரும், மற்றப் பிர்மவித்துக்களும் இந்தப் பிரஞ்ஞாத்மாவை யறிவதால் இவ்வுலகத்தை விட்டு சுவர்க்கத்தில் எல்லாக் காமங்களையும் பெற்று அமிருதத் தன்மையை அடைகின்றார்கள்.

**ஐதரேயோபநிஷத் முற்றிற்று.**